RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S120

# Circumstances and Marriage Patterns of Tamil People

## காலச் சூழலும் தமிழர் திருமண முறைகளும்

**M. Durga [a,*]**

[a] Department of Tamil, Mahalakshmi womens college of arts and science, Paruthippattu, Chennai-600071, Tamil Nadu, India.

*Corresponding author Email: durgaselvam1977@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S120

Received: 13-04-2022; Revised: 01-08-2022; Accepted: 05-08-2022; Published: 19-08-2022

**Abstract:** Marriage, as one of the elements of human culture, is a moral system done in the interest of society. Because chastity was considered ideal, the man and the woman established the tradition of marriage as they considered chastity the best. The great scholars of knowledge also laid down canons for the marriage system. A holistic lifestyle, where two hearts are in harmony, is considered ideal. Our Tamils live by proclaiming the nobility of family relations and cultural heritage on the world stage. This study summarises that from the time of Tolkappiyam till today, wedding methods have changed in a simple and great way, such as holding hands, wearing mangalanaan, praying with holy fire, tying a mangalanaan, following rituals, self-respecting marriage, registered marriage, registering on the internet, and arranging marriage according to the place, nature, and time of the marriage.

**Keywords:** Marriage, Culture, Manapandal, Ritual, Satra.

**Language:** Tamil

### முன்னுரை

திருமணம் என்பது ஆணும், பெண்ணும் இணைந்து வாழும் இல்லற வாழ்வில் மேற்கொள்ளப்படும் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு. மனித இனப் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான திருமணம் சமுதாயத்தின் நலன் கருதி செய்யப்பட்ட ஒழுக்க முறை. பலர் அறிய கணவன் மனைவியாக சேர்ந்து வாழ முடிவெடுத்திருப்பதை பிரகடனம் செய்யும் செயலே திருமணம். சமூக வளர்ச்சியின் காரணி என்று கூட சொல்லலாம். அத்தகைய திருமண முறை காலச்சூழலுக்கு ஏற்றவாறு அடைந்த மாற்றங்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### திருமணம் குறித்த வேறு பெயர்கள்

திருமணத்தை குறிக்க தமிழர்கள் பல்வேறு சொற்களைப் பயன்படுத்தினர். அவற்றின் முறையே கடி, மணம், மன்றல், வதுவை, வரைவு, வரைவு கடாதல், களவு மணம், கற்பு மணம், உடன்போக்கு மணம், கல்யாணம், கலியாணம் விவாகம் என்பன. இவை திருமணம் நடைபெறும் இடம், தன்மை, காலச்சூழலுக்கு ஏற்றவாறு பிற மொழியாளர் தொடர்பாலும், பிற சமயத்தவர் தொடர்பாலும் தமிழர் வழக்கில் இடம்பெற்றுள்ளது என்பதை அறியலாம்.

### திருமண மரபை தோற்றுவித்தல்

பண்டையத் தமிழர் தன் வாழ்க்கையில் களவொழுக்கம், கற்பொழுக்கம் ஆகிய இரு ஒழுக்கங்களைப் பின்பற்றி வாழ்ந்து கொண்டிருந்தனர். அதில் கற்பு நெறியை சிறந்ததாக கருதியதால் பெற்றோரின் சம்மதத்துடன் உலகறிய தலைவனும் தலைவியும் திருமணம் செய்யும் மரபை ஏற்படுத்தினர். இதனை,

"கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம் (Sivalinganar, 1985).

நாட்டை ஆளக்கூடிய முடி யுடை மூவேந்தர்களுக்கு வகுக்கப்பட்ட திருமண முறைகள் நாளடைவில் அவன் குடையின் கீழ் வாழும் குடிகளுக்கும் உரியதாயிற்று.

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்

கீழோர்க்காகிய காலமும் உண்டே"

திருமண முறை எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தது (Sivalinganar, 1985).

## திருமணத்தில் வாழ்வியல் கூறுகள்

அக்காலத்தில் தலைவன் பொய்யும், வழுவும் உடையவனாக தலைவியுடன் இணைந்து வாழ்ந்து விட்டு தலைவியை கைவிடுதல், வேறு பெண்களை நாடிச் செல்லுதல் போன்ற கட்டுப்பாடற்ற நிலை நிலவிய காரணத்தால் அறிவில் சிறந்த சான்றோர்கள் மண முறைக்கு நியதிகளை வகுத்தனர்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

தொல்காப்பியர் காலம் முதல் தமிழரிடையே திருமண முறை வழக்கில் இருந்துள்ளன (Sivalinganar, 1985).

"உலகில் மனிதன் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்ற கொள்கையுடன் வாழ்ந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வியல் கூறுகளை இலக்கணமாகக் கொண்டு வாழ்ந்தனர் தொல்காப்பியர் காலத் தமிழ் மக்கள்"(4) என்று ஆ. சிவலிங்கனார் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார் (Sivalinganar, 1985).

## வாழ்த்தொலி எழுப்புதல்

சங்க காலத்தில் திருமணங்கள் இல்லத்தில் நடைபெற்றது. திருமணம் நடைபெறும் வீட்டின் கண் 45 கால்களோடு பந்தல் அமைப்பர். ஒவ்வொரு பந்தலிலும் ஒரு தெய்வம் நிலைப் பெற்றதாகக் கருதி நவதானியங்களை இட்டு, மஞ்சள் குங்குமத்துடன் பூசை செய்வர். அதனை,

"ஐயொன்பதின் வகை

தெய்வநிலை இய

கைபுனை வனப்பின் கான்முதல்

தோறும்

ஆரணங்காகிய

வணிமுளையகல் வாய்"

என்ற பெருங்கதை பாடல் வழி அறியலாம் (Kongu Velir, 2007). வரிசையாக கால்களை நட்டுக் குளிர்ந்த மணப்பந்தல் முழுவதும் வெளியில் இருந்து கொண்டுவந்த வெண் மணல் பரப்பப்பட்டு இருந்தது. மனையில் விளக்குகள் ஏற்றி, மலர் மாலைகள் நெருக்கமாக தொங்கவிடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

"நிரை கால்

தண் பெரும் பந்தர் தருமணல் ஞெமிரி

மனை விளக்குறுத்து, மாலை தொடரி"

என்று அகநானூறு பாடல் குறிப்பிடுகின்றது (Puliyur Kesigan, 1997).

இப்பாடலடியில் குழந்தைகளைப் பெற்ற வாழ்வரசி நால்வர், மணப்பந்தலில் நுழைந்து மணமக்கள் மீது நெல்லையும் பூவையும் தூவி நீராட்டுவர். பின்னர் "கற்புநெறி நின்று தவறாமல் நல்லறங்களை செய்து கணவன் விரும்பத்தக்க மனைவியாக இருப்பாயாக" என்று தலைவனிடம் தலைவியை ஒப்படைத்து வாழ்த்தொலி எழுப்புவர்.

திங்களினை ஒத்த உரோகிணி கூடிய நன்னாளில் அதிகாலையில் திருமணம் நடந்துள்ளதை அகநானூறு பாடல்கள் (86, 136) விரிவாக விளக்குகின்றது. அன்றைய தமிழருடைய திருமணம் எளிமையாக நிகழ்ந்துள்ளது.

## மங்கல நாண் அணிவித்தல்

திருமணம் நடத்துவதென்பது அவரவர் வசதிக்கேற்ப எளிமையாகவும், கோலாகலமாகவும் நடப்பது உண்டு. இனக் குழுக்களாக வாழ்ந்த மக்களது கலைப் படைப்பையும், திறமையையும் பிறர் காணும் வண்ணம் திருமண நிகழ்ச்சியில் ஈடுபட்டு பணியாற்றினர். அந்தவகையில் சிலம்பில் கண்ணகி கோவலன் திருமணம் வெகுச் சிறப்பாக நடைபெற்றது.

வைரமணித் தூண்களை உடைய திருமண மண்டபத்தில் உட்கூரை முத்துக்களால் பொருத்தி, நீல பட்டுத் துணியால் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டத் திருமண மேடையில் கோவலன் கண்ணகிக்கு மங்கலநாண் பூட்டும் திருமணக்கோலத்தை காண விரும்பிய பெற்றோர்,

"இருபெரும் குரவரும் ஒருபெரு நாளால்

மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி"

என காப்பியக் காலத்தில் மங்கல நாண் அணிந்தக் குறிப்பு உள்ளதே தவிர தாலி என்னும் அடையாளச் சின்னம் அணிவித்ததாக குறிப்பு இல்லை. ஆகவே இம்முறை இடைக்காலத்தில் தோன்றிய ஒன்றாகும் (Srichandran, 2001; Subramanian, 1999).

## தீ வலம் வருதல்

திருமண நிகழ்ச்சியின்போது அந்தணர் வேத மந்திரங்களை ஓத மணமகளின் கையை மணமகன் பிடித்து "ஸ்பத பதி" என்னும் சப்தமி மந்திரத்தை சொல்லிக் கொண்டு இருவரும் அக்னியைச் சுற்றி வந்து தங்கள் திருமணத்தை உறுதி செய்வதை,

"வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்

பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து

காய்ச்சினமா களிறன்னான் என்கைப்பற்றி

தீவலம் செய்ய"

என்ற நாச்சியார் திருமொழி பாசுரத்தின் வாயிலாக அறிய முடிகிறது (Raghavan, 2000).

## சடங்குகளும், மண முறைகளும்

கோயிலிலோ அல்லது மண்டபத்திலோ சுற்றத்தையும், நட்பையும் சாட்சியாக வைத்து புரோகிதர் மந்திரம் சொல்ல, மணமகளுக்கு மணமகன் தாலி கட்டி, குங்குமமிட்டு இருவரும் அக்னியை மூன்று முறை சுற்றி வருகின்றனர்.

பின்னர் பட்டம் கட்டுதல், பொரியிடல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், மெட்டி இடுதல், நீர்த் துறையில் முளைப்பாரி கொட்டுதல் என நீளும் பல சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

மணமக்கள் ஒருவருக்கொருவர் சகஜமாக வேண்டும் என்பதால் கணையாழி எடுத்தல், ஊஞ்சல் ஆடுதல், தலையில் அப்பளம் உடைத்தல், பூப்பந்து உருட்டுதல் போன்ற சில விளையாட்டுகளை சுற்றம் மகிழ விளையாடுவார்கள்.

அத்துடன் பின்னணி இசையாக மங்களவாத்தியம், திருமணத்திற்கு வந்தவர்களுக்கு தலைவாழை இலையில் அறுசுவை உணவுடன் கூடிய விருந்தோம்பல், பரிசுப்பொருட்கள் அளித்தல், புகைப்படக் காட்சி, காணொலிக் காட்சி என சிறப்பாக திருமணங்கள் நடைபெறுகின்றன.

## பதிவுத் திருமணம்

பதிவுத் திருமணம் என்பது 'காதலர்கள் தங்களை யாரும் பிரிக்க முடியாதபடி சட்டத்தின் துணைகொண்டு சாட்சி கையெழுத்திடுவோர் முன்னிலையில் செய்துகொள்ளும் திருமணமாக இருந்தது' ஆனால் தற்போது பதிவுத்திருமணம் காலத்தின் கட்டாயமாகிறது. ஏனெனில் சொத்துரிமை, வாரிசுரிமை, குழந்தையின் முறை பிறப்புத் தன்மை ஆகியவற்றை நிரூபிக்க திருமணச் சான்றிதழே முக்கிய சான்றாவணமாக பயன்படுகிறது.

இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணங்கள் அவரவர் வழக்கப்படி நடைபெற்றாலும் பின்னர் திருமணப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதே நடைமுறையில் உள்ளது.

## இன்றையச் சூழலில் திருமணங்கள்

கணினி மயமான இன்றையச் சூழலில் இணையதளத்தில் மணமக்களை தேர்வு செய்கிறார்கள். காணொலி மூலம் பார்த்து தட்டச்சு செய்து கொள்கிறார்கள் மற்ற விஷயங்களை தொலைபேசியின் மூலம் உரையாடிக் கொள்கிறார்கள். இனிப்பு, காரம், தேனீர் செலவு மிச்சம் என்றாலும் ஏகத்துக்கும் பட்ஜெட்டை எகிற வைக்கும் வேறு புதிய செலவினங்கள் உருவாகி இருக்கின்றன.

திருமணப் பத்திரிக்கைகள் நெருங்கிய உறவினர்களைத் தவிர மற்றவர்களுக்கு புலனக் குழுவில் பகிரப்படுகிறது. இன்றையச் சமகால சூழலில் ஆண்களும், பெண்களும் வேலைக்குச் செல்வதால் திருமணத்திற்கு முதல் நாள் நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

திருமணம் வாழ்வில் ஒருமுறை நடைபெறும் பெரும் நிகழ்ச்சி என்பதால், சமூகத்தின் முன் தன்னை பெருமைப்படுத்தி உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணுவதால் ஆடம்பரமாக நடத்தப் பெறுகிறது. மற்றும் பந்தக்கால் நடுவது முதல் தம்பதியர்களை தேனிலவுக்கு அனுப்பி வைப்பது வரையிலும் தொகுப்பு முறை திருமணங்களும் நடைபெறுகிறது.

தற்போது உலகமெங்கும் கொரோனா எனும் நோய் தொற்று பரவும் நிலை ஏற்பட்டிருப்பதாலும், ஊரடங்கு காரணத்தினாலும் அரசின் சில கட்டுப்பாடுகளுடன் ஐம்பதுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய மக்களின் முன்னிலையில் எளிய முறையில் திருமணம் நடைபெறுகிறது

## முடிவுரை

காலச்சூழலுக்கு ஏற்றவாறு திருமண முறைகள் பலவாக இருந்தாலும் இரு மனமொத்த வாழ்க்கை முறை சிறந்ததாக கருதப்படுகிறது. குடும்ப உறவுகளின் உன்னதத்தையும் பாரம்பரியத்தையும் உலக அரங்கில் பறைசாற்றி வாழ்கின்றனர் நம் தமிழர்கள் என்பது பெருமைக்குரியது.

## References

Kongu Velir, (2007) Perungathai, Santhi Sadhana pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (1997) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Raghavan, V.S.V., (2000) Naalayira Divya Prabandham, 1st edition, Mulai nilaiyam, Chennai, India.

Sivalinganar, A., (1985) Tolkappiyam uvamaiyiyal, International Institute of Tamil Studies, Chennai, India.

Srichandran, J., (2001) Silappatikaram, Vardhamanan Pathippagam, Chennai, India.

Subramanian, Sa.Ve., (1999) Tholkappiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

M. Durga, Circumstances and Marriage Patterns of Tamil People, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 101-105. DOI: https://doi.org/10.54392/ijmrd223120